

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

2021

செயலாற்றுகை அறிக்கை

811/A,ஜயந்திபுர மாவத்தை, பத்தரமுல்லை

உள்ளடக்கம்

அத்தியாயம் 01

நிறுவனத்தின் விவரம் /நிறைவேற்றுப் பொழிப்பு

1.1	அறிமுகம்	1
1.2	நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள்	2
1.3	பிரதான பணிகள்	3
1.4	நிறுவக விளக்கப்படம்	8
1.5	திணைக்களத்தின் கீழ் இயங்குகின்ற பிரதான பிரிவுகள் மற்றும் வனசீவராசிகள் பாதுகாப்பு பிராந்திய அலுவலகங்கள்	8
1.6	திணைக்களத்தின் கீழ் இயங்குகின்ற நிதியங்கள்	9
1.7	வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் விபரம்	9

அத்தியாயம் 02

முன்னேற்றம் மற்றும் தூரநோக்கு

2.1	அபிவிருத்திப் பணிகளின் முன்னேற்றம்	10
2.1.1	திரட்டிய நிதியம் மற்றும் வனவிலங்குப் பாதுகாப்பு நிதியம் ஆகியவற்றின் கீழ் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்திப் பணிகளின் முன்னேற்றம்	10
2.1.2	சுற்றாடல் முறைமைகளின் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ (ESCAMP)செயற்திட்டத்தின் முன்னேற்றம்	13
2.1.3	ஏனைய நிதியங்களின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்கள்	16
2.2	2021 ஆண்டில் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட சிறப்புச் சேவைகள்	16
2.3	திணைக்களத்தின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கான இலக்குகள் மற்றும் சவால்கள்	19

அத்தியாயம் 03

வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

3.1	நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று	24
3.2	நிதி நிலைமை பற்றிய கூற்று	25
3.3	காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று	26
3.4	நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்	27
3.5	வருமான சேகரிப்பு செயலாற்றுகை	27
3.6	ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை	27
3.7	நி.பி. 208 பிரகாரம், ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் முகவராக இத் திணைக்களம்/மாவட்டச் செயலகம்/ மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு	28
3.8	நிதி அல்லாத சொத்துக்களை அறிக்கையிடல் செயலாற்றுகை	28
3.9	கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை	28

அத்தியாயம் 04

செயலாற்றுகைச் சுட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்) 29

அத்தியாயம் 05

வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைந்து கொள்வதற்கான செயலாற்றுகை

5.1 அடையாளம் காணப்பட்ட வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் 31

5.2 வலுவாதார அபிவிருத்தி இலக்குகளின்14, 15 ஆம் அடைவுகள் மற்றும் சவால்கள் 33

அத்தியாயம் 06

மனித வள விபரம்

6.1 பதவியணி முகாமைத்துவம் 34

6.2 பற்றாக்குறையான அல்லது மிகையான மனித வளங்கள் நிறுவனத்தின் செயலாற்றுகையினை பாதிக்கும் விதம் 34

6.3 மனித வள அபிவிருத்தி 34

அத்தியாயம் 07

இணக்கப்பாட்டு அறிக்கை 36

அத்தியாயம் 01

நிறுவனத்தின் விவரம் /நிறைவேற்றுப் பொழிப்பு

1.1அறிமுகம்

இலங்கையின் சுதேச தாவர விலங்கினங்களை அவற்றின் இயற்கையான வாழிடங்களுடன் பாதுகாத்தல் தேசிய முன்னுரிமைகளிலொன்றாகும். வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் நாட்டின் முழு நில மற்றும் கடல் ஆள்புலத்தின் மீதுள்ள வனசீவராசி வளங்களை பாதுகாப்பதற்கு பொறுப்பான பிரதான அரச நிறுவனமாகும். அது தொடர்பான வனவிலங்கு மற்றும் தாவரங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ், வனசீவராசிகள் ஒதுக்கிட வலையமைப்பை தாபிப்பதற்கும் முகாமை செய்வதற்குமான சட்ட அதிகாரத்தை கொண்டுள்ளது. இது தற்போது 9100 சதுர கி.மீ. மொத்த இடப்பரப்பை விஞ்சியுள்ளது. இது இலங்கையின் நிலப்பரப்பின் 16% ஆகும். இது வரையில் இலங்கையில் 40 தேசிய ஒதுக்கிடங்களும் 67 அபயபூமிகளும் உள்ளடங்களாக 107 வனசீவராசிகள் ஒதுக்கிடங்கள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இந்நாட்டிலுள்ள வனசீவராசிகள் ஒதுக்கிடங்கள் நாடளாவிய ரீதியில் பரந்துபட்டுக் காணப்படுகின்றமை அட்டவணை 1இல் விபரிக்கப்பட்டுள்ளது. வனவிலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டமானது வனசீவராசிகள் ஒதுக்கிடப் பிரதேசங்களுக்கு வெளியிலுள்ள வனசீவராசி வளங்களுக்கான சட்ட ரீதியான பாதுகாப்பினை வழங்குகின்றது. வனவிலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தைப் பயனுறுதி வாய்ந்த முறையில் நடைமுறைப்படுத்தும் பொறுப்பு வனசீவராசிகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உயிர்பல்வகைமை வளங்களை அவற்றின் இயற்கையான வாழிடங்களுடன் சேர்த்து பேணுதற்கு மேலதிகமாக வனசீவராசிகள் ஒதுக்கிட வலையமைப்பினை, இந்நாட்டின் விவசாயம் மற்றும் நீர் மின்வலு பிறப்பாக்கத்திற்காக நீரை வழங்குகின்ற நாட்டின் பாரிய நீர்த்தேக்கங்களினதும், நீரேந்துப் பிரதேசங்களினதும் நீண்ட கால பாதுகாப்பிற்கும் உத்தரவாதமளிக்கின்றது. சேனநாயக சமுத்திரம் உட்பட கல்லோயா பள்ளத்தாக்கின் நீர்த்தேக்கங்கள், மகாவலி நீர்த்தேக்கங்கள், மத்திய மற்றும் வடமத்திய மாகாணங்களில் மகாவலி கங்கையிலிருந்து நீரைப் பெற்றுக் கொள்ளும் நீர்த்தேக்கங்கள், உடவளவை, மவ் ஆற, லுணுகம்வெஹர மற்றும் வெஹெரகல ஆகிய நாட்டின் தென் பகுதியிலுள்ள நீர்த்தேக்கங்கள் என்பன வனசீவராசிகள் ஒதுக்கிடங்களில் அமைந்துள்ளனவாகும்.மேலும் பராக்கிராம சமுத்திரம், கவுடுல்ல, மின்னேரியா, கிரிதலே, பதவிய, கலாவெவ மற்றும் யோத வாவி ஆகிய பிரதான குளங்கள் மற்றும் அவற்றின் நீரேந்து பிரதேசங்கள் வனசீவராசிகள் ஒதுக்கிட பிரதேசங்களாக பாதுகாக்கப்படுகின்றன. இவ்வாறு வனசீவராசிகள் ஒதுக்கிடப் பிரதேசத்தினுள்அமைந்துள்ள விவசாய மற்றும் நீர் மின்வலு பிறப்பாக்கத்திற்காக முக்கியத்துவம் பெறும் 40 இற்கும் அதிகமான நீர்த்தேக்கங்கள் காணப்படுகின்றன.

மேலும் மஹாவலி கங்கை , களனி கங்கை, களு கங்கை, வளவை கங்கை ஆகிய பிரதான கங்கைகளின் உயர் நீரேந்துப் பிரதேசங்களும், ᄆᄆீபாத அடவி இயங்கை ஒதுக்கிடம், ஹோட்டன்தென்ன தேசிய பூங்கா போன்றனவும் வனசீவராசி ஒதுக்கிடங்களினுள்ளேயே அமைந்துள்ளன.அவ்வாறே நாட்டின் இயற்கை சுற்றாடலை அண்டியதாக சுற்றுலாத்துறையில் செல்வாக்குச் செலுத்துவது வனசீவராசிகள் ஒதுக்கிடங்களிலுள்ள வனசீவராசிகள் வளங்கள் ஆவதுடன், வனசீவராசிகள் ஒதுக்கிடத்தை அண்டிய சுற்றாடல் சுற்றுலாத் தொழிலினூடாக 2021 ஆண்டில் பெற்றுள்ள வருமானம் ரூபா 296 மில்லியன் மாத்திரமேயாகும்.

1.2 நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள்

தூரநோக்கு

தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததியினருக்காக வனசீவராசி மரபுரிமைகளைப் பேணுதல்.

பணிக்கூற்று

பங்களிப்புடன்கூடிய முகாமைத்துவத்தினூடாக வனசீவராசிகள் மரபுரிமைகளை பாதுகாப்பதை உறுதிப்படுத்தல்.

குறிக்கோள்கள்:

- தேசிய மற்றும் சர்வதேச கொள்கைகளுக்கு பொருத்தமான வகையில் வனசீவராசி வளங்களை பேணுவதற்கு தேசிய மூலோபாயத் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைத்தல்.
- தனிச்சிறப்புமிக்க விஞ்ஞானரீதியான பெறுமானமுடைய பிரதேசங்கள் அடங்கலாக நாட்டின் அனைத்து இயற்கை சூழற் தொகுதிகளும் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வகையில் ஒதுக்கிட பிரதேசங்களை பாதுகாத்தலும் காலத்திற்கேற்றவாறும், அரிய வகை வனசீவராசிகளின் சனத்தொகையை பேணிச் செல்லக்கூடியவாறும் எண்ணிக்கை ரீதியாகவும் போதியளவிலும் மேம்படுத்தல் மற்றும் அவற்றிற்கிடையேயான தொடர்புகளை தாபித்தல்
- பொருத்தமான ஆராய்ச்சித் தரவுகள் மற்றும் தகவல்களை அடிப்படையாக கொண்டு ஒதுக்கிட பிரதேசங்களை இனங்காணல், வகைப்படுத்தல், முகாமைப்படுத்தல் மற்றும் அவற்றின் தரத்தினை இற்றைவரைப்படுத்தி அவதானம் செலுத்தல்.
- அருகிவரும் உயிரினங்களைப் பாதுகாப்பதற்கான திட்டங்களை தயாரித்தலும் அவற்றை நடைமுறைப்படுத்தலும்.
- குறிப்பிட்டஒதுக்கிட பிரதேசங்களின் சூற்றாடல் முறைமையினை பாதுகாப்பதுடன், சுற்றாடல் சுற்றுலாத்துறைக்கான சந்தர்ப்பங்களை கையாள்வதற்கான வசதிகளை வழங்குதல்.
- நாட்டினுள் வனசீவராசி வளங்களை சட்டரீதியற்ற முறையில் பயன்படுத்துவதை குறைப்பதற்காக வனவிலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகளினைநடைமுறைப்படுத்தல்
- இலங்கையின் வனசீவராசி வளங்களின் முகாமைத்துவத்துக்காக இயைபான அறிவியல் ஆராய்ச்சிகளை ஊக்கப்படுத்தல்
- பயிற்சி, ஊக்கமளித்தல், தூண்டுதல்களை வழங்குவதனூடாக வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் பணியாட் தொகுதியினரின் ஆற்றல்களை வலுப்படுத்துதல்.
- கல்வி மற்றும் விழிப்பூட்டல் நிகழ்ச்சிகளின் ஊடாக பொதுமக்கள் பாதுகாப்பு தொடர்பாக வழங்கும் பங்களிப்பினை அதிகரிக்கச் செய்தல்.
- ஒதுக்கிடங்கள் மீதான தங்கியிருத்தலைக் குறைப்பதற்காக பேணல் செயற்பாடுகளில் பொதுமக்களின் பங்களிப்பினை ஊக்கப்படுத்தலும் பாதுகாக்கப்பட்ட ஒதுக்கிடங்களை அண்டி வாழ்கின்ற சமுகத்தினரின் சமூக பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவதில் அவர்களுக்கு உதவுதலும்

1.3 பிரதான பணிகள்

- ✓ வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திற்கான வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்தல்
- ✓ விசேட அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு செயற்பாடுகளுக்காக செயற்திட்ட முன்மொழிவுகளைத் தயார்செய்தல்.
- ✓ திணைக்களத்தின் மாதாந்த, காலாண்டு, வருடாந்த முன்னேற்ற அறிக்கைகளை தயாரித்தல்
- ✓ திணைக்களத்தின் www.dwc.gov.lkஇணைய தளத்தினை இற்றைவரைப்படுத்திப் பேணல்.
- ✓ வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் நாடு முழுவதிலும் உள்ள வானொலி தொடர்பாடல் முறைமையினை கண்காணித்தலும், தரமுயர்த்தலும் பேணலும்.
- ✓ வனசீவராசிகள் திணைக்களத்தின் நாடளாவிய கணனி வலையமைப்பை முகாமைப்படுத்தல், பேணல் மற்றும் மேம்படுத்தல்.
- ✓ தேசிய பூங்காக்களில் நுழைவுச்சீட்டு விநியோகத்தை கணனிமயப்படுத்தல் தன்னியக்கமாக்கல் மற்றும் GIS அலகினை முகாமைப்படுத்தல்

மிடல் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்

- ✓ ஒதுக்கிட பிரதேசங்களுக்கான முகாமைத்துவத் திட்டங்களை தயாரித்தலும் மீளமைத்தலும்.
- ✓ வள பொருட்பட்டியல்களை தயாரித்தலும் இற்றைப்படுத்தலும்
- ✓ ஒதுக்கிட பிரதேச வலையமைப்பை புலனாய்தலும் ஒதுக்கிடப் பிரதேசங்களை பிரகடனப்படுத்தலும், எல்லைகளை அளவிடலும், குறியிடலும்.
- ✓ வனசீவராசிகள் வாழ்விட முகாமைத்துவம் தொடர்பான கொள்கை வகுத்தலும், தொடர்நடவடிக்கைகளும்.
- ✓ படர்தாவரங்களுக்கான விசேட கட்டுப்படுத்தல்நடவடிக்கைகளை முன்னெடுத்தல்
- ✓ தீப்பட்டிகள் மற்றும் வனசீவராசிகள் வாழ்விடக் கூறுகளை முகாமைப்படுத்தல்
- ✓ சூழல் மாசடைதலைக் கட்டுப்படுத்தல் மற்றும் வனசீவராசி சிறப்பினங்களை பாதுகாத்தலுக்கான திட்டங்களை ஒருங்கிணைத்தலும், கண்காணித்தலும்
- ✓ ஒதுக்கிட பிரதேசங்களில் முன்மொழியப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பான சுற்றாடல் சாத்தியவள ஆய்வினை மேற்கொள்ளல்

இயற்கை வள முகாமைத்துவம்

- ✓ வனவிலங்குகள் மற்றும் தாவரங்கள்பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்குரிய பணிகளை மேற்கொள்வதற்குத் திணைக்களத்தின் வெளிக்கள பணியாட்தொகுதியினருக்கு போதிய ஒத்துழைப்புக்களை வழங்குதல் மற்றும் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய பதிவு செய்தல் மற்றும் அனுமதிப்பத்திர விநியோக பணிகளை மேற்கொள்ளல்.
- ✓ வனவிலங்குகள் மற்றும் தாவரங்கள்பாதுகாப்பு கட்டளைச் சட்டத்திற்குரிய திருத்தங்களை மேற்கொள்ளல் மற்றும் அதன் கீழ் விதிக்கப்படும் ஒழுங்குவிகளை தயாரித்தல்.
- ✓ சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் சட்டத்தை அமுலாக்குவது குறித்து ஏனைய அரச நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள்.
- ✓ CITES சமவாயத்தின் கீழ் அனுமதிச்சீட்டுக்களை வழங்குதல்.

சட்ட அமுலாக்கல்

- ✓ தேசிய யானைப் பாதுகாப்புக் கொள்கையை நடைமுறைப்படுத்தல், காட்டு யானைகள் தொடர்பிலான மொத்த தரவுகளையும் முகாமைப்படுத்தலும், இற்றைப்படுத்துதலும்.
- ✓ யானை நடைபாதைகள் உள்ளடங்கலாக யானைப் பாதுகாப்பு இடப்பரப்பினை தாபித்தல்
- ✓ காட்டு யானையினால் விளைவிக்கப்பட்ட சேதங்களுக்கான இழப்பீடு வழங்கல்
- ✓ குடியிருப்புகளில் யானைகளின் நடமாட்டங்களிற்கு தடையாக மின்வேலிகள், வடலி வேலிகள் மற்றும் வேறு நவீன தீர்வுகள் போன்ற பௌதிக தடைகளை தாபித்தல்
- ✓ யானை முகாமைத்துவத்துடன் தொடர்புபட்ட பொருட்களையும் உபகரணங்களையும் கொள்வனவு செய்தல்

யானைகளின் பாதுகாப்பு

- ✓ வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்து, நடைமுறைப்படுத்தல் மற்றும் பல்வேறு வெளித்தரப்பினரால் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகளுக்கு உரிய ஆலோசனைகளையும் அங்கீகாரத்தினையும் வழங்குதல்
- ✓ வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினால் வெளிநாட்டுப் பயிற்சி மற்றும் கருத்துரங்குகள் தொடர்பாக அலுவலர்களை கலந்துகொள்ளச் செய்தல்.
- ✓ பாடசாலை மாணவர்கள், அரசாங்க அலுவலர்கள் மற்றும் கிராமிய மக்களுக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களையும், கண்காட்சிகளையும் நடாத்துதல்.
- ✓ தேசிய வனசீவராசிகள் பயிற்சி நிலையத்தின் பணிளை கண்காணித்தலும், அவற்றை பேணலும்.
- ✓ திணைக்களத்தின் பிரச்சார மற்றும் ஊடக நிகழ்த்தித் திட்டங்களைத் திட்டமிடல், நடைமுறைப்படுத்தல்

ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

- ✓ சுற்றுலா சேவை திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகளை தயார் செய்தல், புதிய சுற்றுலாப் பொதிகளை அறிமுகம் செய்தல் மற்றும் சுற்றுலாத் துறைச் செயற்பாடுகளைப் பல்வகைப்படுத்தல்
- ✓ சுற்றுலாச் சேவை மற்றும் சுற்றாடல் சுற்றுலா அலுவல்களை சந்தைப்படுத்தலும் ஊக்கப்படுத்தலும்.
- ✓ ஒதுக்கிட பிரதேசங்களின் உள்ளேயும் அவற்றுக்கு வெளியேயும் தகவல் நிலையங்களை நிறுவுதல்.
- ✓ ஒதுக்கிட பிரதேசங்களில் தங்கியிருக்கும் தன்மையைக் குறைப்பதற்காக ஒதுக்கிட பிரதேசங்களின் முகாமைத்துவம் தொடர்பாகஅவர்களது பங்களிப்பைப் பெறுதல்.
- ✓ கல்வி மற்றும் விஸ்தரிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதன் மூலம் பொது மக்கள் மத்தியில் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

சுற்றுலா சேவை முகாமைத்துவ சுற்றாடல் சுற்றுலா மற்றும் சமுதாயஞ்சார் பரப்புரை

- ✓ வனவீவராசிகளது சுகாதார நிலைமைகள் மற்றும் நோய் நிலைமைகள் சம்பந்தமாக கண்காணித்தலும், அதற்கான நடவடிக்கைகளை எடுத்தலும்.
- ✓ வனசீவராசிகளது கால்நடை காப்புறுதி சம்பந்தமாக பயனுறுதி வாய்ந்ததும் துரிதமானதுமான பதிலளிப்பு.
- ✓ வனவிலங்குகளுக்கான பிரேத பரிசோதனை நடாத்துதல்.
- ✓ நலன்புரி பற்றிய கண்காணிப்பு, அதன் தரத்தினை மேம்படுத்தல் மற்றும் வன விலங்குகளுக்கும் மனிதனுக்குமிடையேயான மோதலை கட்டுப்படுத்த பங்களிப்புச் செய்தல்.
- ✓ விலங்குகளுக்கான புனர்வாழ்வளிப்பு நிலையங்கள் மற்றும் எத் அத்துரு செவன தொடர்பான முகாமைத்துவம்
- ✓ வனவிலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழான நிதி ஏற்பாடுகளுக்கு ஏற்ப தேவையான சான்றிதழ்களை வெளியிடல், தேவையான சந்தர்ப்பங்களில் நீதிமன்ற செயற்பாடுகளுக்கு உதவி புரிதல்.

வனசீவராசிகள் சுகாதார முகாமைத்துவம்

- ✓ மனிதவள மற்றும் பொது நிர்வாகத் திட்டங்களைத் தயாரித்தல்.
- ✓ பணியாட்தொகுதி ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு, வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- ✓ இடமாற்றங்கள், சேவை நீடிப்புகள், ஓய்வுபெறச் செய்தல்கள், ஓய்வூதியம் மற்றும் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியம் என்பன தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்.
- ✓ திணைக்கள அலுவலர்களுக்கான செயலாற்று நடவடிக்க்கள், சம்பள ஏற்றங்களை வழங்குதல்மற்றும் திடீர் விபத்துக்களுக்கான நட்டஈடுகளைச் செலுத்துதல்
- ✓ போக்குவரத்து செயற்பாடுகளைக் கண்காணித்தல்,வெ ளிக்கள கட்டிட நிர்மாணிப்புக்களும் பழுதுபார்த்தல்களும்.

மனிதவள அபிவிருத்தி

- ✓ ஒதுக்கிடப் பிரதேசங்களில் பௌதீக வசதிகளை மேம்படுத்தல் மற்றும் நிர்மாணிப்பு திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்
- ✓ ஒதுக்கிடப்பட்ட பிரதேசங்களுக்குள் சூழவுள்ள வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு சொந்தமான கட்டடங்கள் மற்றும் நிர்மாணிப்புக்களின் பேணல், வீதி முறைமை பேணல் மற்றும் நிர்மாணித்தல்

பொறியியல்

- ✓ மதிப்பீடுகளைத் தயாரித்தல்.
- ✓ திறைசேரியிடமிருந்து கிடைக்கப்பெறும் கட்டுநிதிகளை பிராந்திய அலுவலகங்களுக்கு வழங்குதலும் மீளளிப்புச் செய்தலும். அனைத்து வருமானங்கள் மற்றும் செலவினங்களை கணக்கிடல் தொடர்பாக மாதாந்த அறிக்கைகளைத் தயாரித்து அரசாங்க கணக்குகள் திணைக்களத்திற்கு அனுப்புதலும் மாதாந்தக் கணக்கு அறிக்கைகளை கணனியில் அச்சிடப்பட்ட திறைசேரிக் குறிப்புக்களுடன் ஒப்புநோக்குதலும்
- ✓ வருடாந்த செலவினங்கள், வருமானம், வனவிலங்குகள் பாதுகாப்பு நிதியம், அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பண பி கணக்கு மற்றும் பொது வைப்புக் கணக்கு என்பவற்றுக்கான கணக்குகளைத் தயாரித்து கணக்காய்வாளர் அதிபதிக்குச் சமர்ப்பித்தல்.
- ✓ தலைமையகத்திலுள்ள அனைத்துவித பெறுகை நடவடிக்கைகள் மற்றும் களஞ்சியசாலை நடவடிக்கைகளை கண்காணித்தலும், நிர்வகித்தலும்.
- ✓ கணக்காய்வாளர் அதிபதியினால் வழங்கப்படும் அனைத்து கணக்காய்வு விசாரணைகள் மற்றும் அரச கணக்குகள் செயற்குழுவின் விசாரணைகள் என்பன தொடர்பாக பதிலளித்தல்.

நிதி

1.4.நிறுவக விளக்கப்படம்(இணைப்பு 06 ஐ பார்வையிடவும்)

1.5 திணைக்களத்தின் கீழுள்ள பிரதான பிரிவுகள், வனசீவராசிகள் பாதுகாப்பு பிராந்திய அலுவலகங்கள்


பணியாட்தொகுதி

துறை
1713

1976

பிரதான அலுவலகங்கள்
263

வனசீவராசிகள்....



வனவிலங்கு காப்பகங்கள்

ஒதுக்கிட பிரதேச வகை		தபோது பிரகடனப் படுத்தப்பட்டுள்ள எண்ணிக்கை
தேசிய ஒதுக்கிடம்	அதிகூடிய இயற்கை ஒதுக்கிடம்	03
	தேசிய பூங்கா	26
	இயற்கை பூங்கா	**09**
	வன நுழைவு	01
	யானை முகாமைத்துவ ஒதுக்கிடம்	**01**
மொத்தம்		40
அபயபூமி		67
முழு மொத்தம்		107

பிரதான பிரிவுகள்

- திட்டமிடல் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவு
- இயற்கை வள முகாமைத்துவப் பிரிவு
- சட்ட அமுலாக்கல் பிரிவு
- யானைகள் பாதுகாப்புப் பிரிவு
- ஆராய்ச்சி மற்றும் பயிற்சிப் பிரிவு
- சுற்றுலா சேவை முகாமைத்துவ சுற்றாடல் சுற்றுலா மற்றும் சமுதாயஞ்சார் பரப்புரை பிரிவு
- வனசீவராசிகள் சுகாதார முகாமைத்துவப் பிரிவு
- பொறியியலாளர் பிரிவு
- மனித வள அபிவிருத்திப் பிரிவு
- நிதிப் பிரிவு

துறை

- வலய அலுவலகம் - 13
- வலய கால்நடை மருத்துவ அலகு - 08
- கால்நடை மருத்துவ வைத்தியசாலை - 01
- உடவளவை எத் அத்துரு செவன
- உடவளவை யானை தடுப்பு நிலையம்
- காட்டு யானை கட்டுப்பாட்டு அலகு - 04
- தேசிய பூங்கா தலைமையகம் - 17
- ரந்தெனிகல பயிற்சி நிலையம்
- வனசீவராசிகள் அடவி பாதுபாப்பு அலுவலகம் -74
- வனசீவராசிகள் பீட்டு அலுவலகம் - 85

1.6. திணைக்களத்தின் கீழ் இயங்குகின்ற நிதியங்கள்

வனசீவராசிகள்பாதுகாப்பு நிதியம் (வ.பா.நி)

வனவிலங்குகள் மற்றும் தாவரங்கள்பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் சட்ட ஏற்பாடுகளின் கீழ் இலங்கையில் வனசீவராசிகளின் பாதுகாப்புக்கு ஆதரவு வழங்கும் நோக்குடன் 1967 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட இந்த நிதியத்தின் குறிக்கோள்கள் பின்வருமாறு.

1. வனவிலங்குகளை பாதுகாப்பதிலிலும் பேணிக்காத்தலிலும் பொதுமக்களின் பங்களிப்பையும் ஒத்துழைப்பையும் மேம்படுத்துதல்.
2. வனசீவராசிகளுக்கான ஒதுக்கிட பிரதேசங்களைப் பேணல்
3. வனசீவராசிகளை பாதுகாப்பதற்கு வனசீவராசி அலுவலர்களும் பொதுமக்களும் வழங்கிய வியக்கத்தக்க பங்களிப்பினைப் பாராட்டுவதற்காக அவர்களுக்கு வெகுமதிகள் மற்றும் பிற ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வழங்குதல்
4. வனசீவராசிகள் குற்றங்களுக்கு எதிராக தகவல் கொடுப்பவருக்கு ஊக்குவிப்புப்படி வழங்குதல்

1.7. வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் விபரம்

சுற்றாடல் முறைமைகளை பேணிப் பாதுகாத்தல் மற்றும் முகாமைத்துவ செயற்திட்டம்(ESCAMP)

இச் செயற்திட்டத்தின் பிரதான நோக்கம் இலங்கையின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒதுக்கிட பிதேசங்களின் உள்ளேயும் வெளியேயும், தரைப்பகுதி, சமுத்திர மற்றும் ஈரலிப்பு நிலங்களினதும் சுற்றாடல் முறைமை முகாமைத்துவ செயற்பாட்டினை மேம்படுத்துவதாகும்.

செயற்திட்டத்தின் பெயர்	சுற்றாடல் முறைமைகளை பேணிப் பாதுகாத்தல் மற்றும் முகாமைத்துவ செயற்திட்டம் (ESCAMP)
பங்களிப்பு முகவராண்மைகள்	உலக வங்கி
செயற்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவினம் ரூ.மி.	3,600 (அ.டொ.35 மி)
செயற்திட்டக் காலப்பகுதி	2017-2021

அத்தியாயம் 02

முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

2.1 அபிவிருத்திப் பணிகளின் முன்னேற்றம்

2.1.1திரட்டிய நிதியம் மற்றும் வனவிலங்குப் பாதுகாப்பு நிதியம் ஆகியவற்றின் கீழ் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்திப் பணிகளின் முன்னேற்றம்

பணிகள்	பிரதான செயலாற்றச் சுட்டி	அலகு	2021 நிறைவு			தொடர் இலக்கு		
			தி.நி.	2021 வரவு செலவுத் திட்ட முன் மொழிவு	வ.பா. நி..	தி.நி.	2022வ ரவு செலவு த்திட்ட முன் மொழிவு	வ.பா. நி..
யானை – மனிதன் மோதலை கட்டுப்ப டுத்தல்	நிர்மாணிக்கப்படும் மின்வேலியின் நீளம் (இணைப்பு 02-அட்டவணை2.7)	கி.மீ.	79	-	30	-	1500	-
	மின்வேலியைப் பராமரிப்பதற்காக இணைக்கப்பட்டுள்ள சிவில் பாதுகாப்பு அலுவலர்கள்	எண்ணிக்கை	4143	-	-	-	-	-
	மாவட்டச் செயலாளர்கள் தொடர்பாக விநியோகிக்கப்பட்ட நிர்மாணிக்கப்படவுள்ள மற்றும் நிர்மாணிக்கப்பட்டு வரும் காவற் குடில்கள்	எண்ணிக்கை	-	-	93	-	385	136
	மின்வேலி, மரக் கம்பம் கொள்வனவு	எண்ணிக்கை	-	7140	-	-	4738	-
	கொள்வனவு செய்யப்பட்ட மின்வேலி உபகரணங்கள்-1500 கி.மீ. (எனஜைசர் – 17 மற்றும் வேலிக்கான ஏனைய உதிரிப்பாகங்கள்)	%	-	80	-	-	20	-
	அகழி அமைத்தல்	கி.மீ.	-	35.5	-	-	-	-
	தொங்கு மின்வேலி நிர்மாணித்தல்	கி.மீ.	-	4	-	-	15	-
	உயிரியல் மின்வேலி நிர்மாணித்தல்	கி.மீ.	-	-	-	-	190	-
	பராமரிக்கப்படும் மின்வேலியின் நீளம்	கி.மீ.	4633	-	-	-	2762	-
	கொள்வனவு செய்யப்பட்ட யானை வெடி	எண்ணிக்கை	-	-	1,296,250	-	-	-
ஒதுக்கிட பகுதிகளின் வாழ்விடங்	பழுதுபார்க்கப்பட்ட நீர் மூலங்கள்	எண்ணிக்கை	09	01	09	06	03	22
	பழுதுபார்க்கப்பட்ட நீர் விநியோக முறைமை	எண்ணிக்கை	-	01	-	-	-	-

களை வளமாக்கல்	டொலான செடி நடுகை ஆணைவிழுந்தான் அபயபூமி	எண்ணிக்கை	-	-	12650	-	-	-
	அப்புறப்படுத்தப்பட்ட படர்தாவர நிலங்களின் தொகை	ஹெக்ரயார்	40	254	-	350	200	308
	கீழ் வளரிகள் அப்புறப்படுத்தப்பட்ட புற்தரைகளின் தொகை	ஹெக்ரயார்	47.2	553.25	-	288	-	495
	புற்தரை முகாமைத்துவம்	ஹெக்ரயார்	78	325.01	-	150	-	369
கடல்வாழ் உயிரினங்களைப் பாதுகாத்தல்	சமுத்திரப் பாதுகாப்பு தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயலமர்வுகள்	எண்ணிக்கை	-	-	01	-	-	-
	திருத்தப்பட்ட ஆமைகளின் அடை காப்பகம்	எண்ணிக்கை	-	-	01	-	-	-
ஒதுக்கிட பிரதேசங்களின் எல்லைகளை குறியிடல்	அமைக்கப்பட்ட எல்லைக் கம்பங்கள்	எண்ணிக்கை	315	-	-	800	-	1000
	அமைக்கப்பட்ட அறிவித்தல் பதாகைகளின் எண்ணிக்கை.	எண்ணிக்கை	116	-	-	-	-	-
	அனைத்து தேசிய பூங்காக்களுக்கும் எல்லைக் கம்பம் கொள்வனவு செய்தல்	எண்ணிக்கை	-	-	-	1500	-	-
	தாபிக்கப்பட்டதும் பழுதுபார்க்கப்பட்டதுமான பெயர் பதாகைகள்	எண்ணிக்கை	35	-	-	26	-	120
	தேசிய பூங்காக்களை அளவையிடல்	கி.மீ.	84	-	-	150	-	-
கட்டிட நிர்மாணிப்பு	நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டிடங்கள், விடுதிக் கட்டிடங்கள்	எண்ணிக்கை	-	-	01	-	-	-
	நிர்மாணிக்கப்பட்டுவருகின்ற கட்டிடங்கள்	எண்ணிக்கை	-	-	02	-	-	-
	திருத்தியமைக்கப்பட்ட நிர்வாக கட்டிடம்	எண்ணிக்கை	-	-	27	01	-	10
	திருத்தியமைக்கப்படுகின்ற நிர்வாக கட்டிடகள்	எண்ணிக்கை	-	-	-	01	-	01
	திருத்தியமைக்கப்பட்ட விடுதிகள்	எண்ணிக்கை	03	-	06	01	-	09
	தாபிக்கப்பட்ட மின் விநியோக முறைமை	எண்ணிக்கை	-	-	01	-	-	-
	தாபிக்கப்பட்ட நீர் விநியோக முறைமை	எண்ணிக்கை	-	-	02	-	-	-
பாதை வலையமைப்பை பழுதுபார்த்தல்	பழுதுபார்க்கப்பட்ட பாதைகளின் தூரம்	கி.மீ.	103	-	75	140	-	40
	பழுதுபார்க்கப்பட்ட சப்பாத்து பாலங்கள்	எண்ணிக்கை	-	-	05	-	-	-
சுற்றாடல் சுற்றுலா நடவடிக்கை	நிர்மாணிக்கப்பட்டுவருகின்ற புதிய சுற்றுலா பங்களாக்கள்	எண்ணிக்கை	-	-	02	-	-	02
	பழுதுபார்க்கப்பட்டசுற்றுலா	எண்ணிக்	-	-	09	-	-	06

களை ஊக்குவித்தல்	பங்களாக்கள்	கை						
	விவரண பதாகை பொருத்துதல் (பூந்தல,ஹோட்டன்தென்ன, லுணுகம்வெஹர)	எண்ணிக்கை	116	-	-	-	-	-
	வனசீவராசிகள் ஒதுக்கிட பிரதேசங்களின் சுற்றாடல் சுற்றுலா நடவடிக்கைகளின் மூலம் பெற்ற வருமானம் (இணைப்பு 03)	ரூ.மி.	296	-	-	-	-	-
	தேசிய பூங்காக்களை பார்வையிட வந்த சுற்றுலாப் பயணிகள் (இணைப்பு 03)	எண்ணிக்கை	592,817	-	-	-	-	-
ஒதுக்கிட பிரதேசங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்	மேம்படுத்தப்பட்ட துப்புரவேற்பாட்டு வசதிகள்மேம்படுத்தப்பட்ட அலுவலகங்கள்	எண்ணிக்கை	02	-	01	04	-	04
	மேம்படுத்தப்பட்ட நீர் விநியோக முறைமை	எண்ணிக்கை	05	-	11	02	-	02
	குழா கிணறு நிர்மாணித்தல்	எண்ணிக்கை	-	-	-	04	-	-
	Solar Panelsவிபொருத்துதல் மற்றும் திருத்தம்	எண்ணிக்கை	-	-	-	02	-	03
	மேம்படுத்தப்பட்ட மின் விநியோக முறைமை	எண்ணிக்கை	01	-	03	05	-	01
வாகனங்களின் திருத்தம்	பழுதுபார்க்கப்பட்ட வாகனங்கள்	எண்ணிக்கை	35	-	-	-	-	-
தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் கொள்வனவு	நானாவித கதிரைகள்	எண்ணிக்கை	31	-	-	-	-	-
	நானாவித மேசைகள்	எண்ணிக்கை	05	-	-	-	-	-
	ஆடை ரெக்	எண்ணிக்கை	05	-	-	-	-	-
	உருக்கிலான கோப்பு அலுமாரி	எண்ணிக்கை	02	-	-	-	-	-
	நணனிகள்	எண்ணிக்கை	61	-	-	-	-	66
	UPS	எண்ணிக்கை	99	-	-	-	-	-
	அச்சு இயந்திரம்	எண்ணிக்கை	07	-	-	-	-	06
	நூலகத்திற்கானJ-ISIS மென்பொருள் கொள்வனவு	எண்ணிக்கை	-	-	-	-	-	66
	திருத்தப்பட்ட ஆயுத வைப்பு	எண்ணிக்கை	-	-	06	-	-	-
	புதிதாக தயாரிக்கப்பட்ட ஆயத வைப்பு	எண்ணிக்கை	-	-	-	-	-	06
பொறித் தொகுதி கொள்வனவு	வளிச்சீராக்கி	எண்ணிக்கை	-	-	-	10	-	04
	Water pumps	எண்ணிக்கை	-	-	-	03	-	07
	நீர் வடிகட்டி	எண்ணிக்கை	04	-	-	05	-	01
மனித வள அபிவிருத்தி	குறுகியகால பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்	எண்ணிக்கை	07	-	14	07	-	26
	வனசீவராசிகள் பாதுகாப்பு தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள்	எண்ணிக்கை	48	-	-	30	-	-
	தேசிய ரூபவாஹினியில் ஒலிபரப்பப்படும் சொபாதாரா நிகழ்ச்சித்திட்டங்கள்	எண்ணிக்கை	-	-	41	-	-	-

	'வனந்தரே கதந்தர' வானொலி நிகழ்ச்சித்திட்டங்கள்	எண்ணிக்கை	-	-	56	-	-	08
	யானை மனிதன் மோதல் தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள்	எண்ணிக்கை	-	-	113	60	-	-
	யானை மனிதன் மோதல் தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள்	எண்ணிக்கை	-	-	57	65	-	-
	திணைக்கள அலுவலர்களினால் மேற்கொள்ளப்பட்ட வனசீவராசிகள் பாதுகாப்பு தொடர்பான ஆய்வுகள்	எண்ணிக்கை	13	-	-	10	-	-
	நடாத்தப்பட்ட ஆய்வுக் குழுக்கள்	எண்ணிக்கை	03	-	-	04	-	-
சமுதாயஞ் சார் பரப்புரை நட வடிக்கைக ள்	பாடசாலை மாணவர்கள் தொடர்பாக பாடசாலை பேக் மற்றும் ஏனை உபகரணங்கள்.	எண்ணிக்கை	-	-	06	-	-	17
	பாடசாலை கட்டிடங்களின் திருத்தம்	எண்ணிக்கை	-	-	02	-	-	
	கிராமிய மக்களை வலுவூட் டும் செயற்திட்டங்கள்	எண்ணிக்கை	-	-	17	-	-	63
	கிராமிய மக்களின் நலன் புரி தொடர்பாக செயற் படுத்தப்பட்ட நி.திட்டங்கள்	எண்ணிக்கை	-	-	15	-	-	39
வனசீவரா சி கள் பாதுகாப்பு க்கான சட்டம்	வனசீவராசிகள் குற்றங்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நீதிமன்ற நடவடிக்கைகள்	எண்ணிக்கை	-	-	813	-	-	-
	தாபிக்கப்பட்ட ஆயுத வைப்பு	எண்ணிக்கை	-	-	06	-	-	-
ஏனைய வனசீவரா சிகளுக்கா ன பாதுகாப்பு நடவடிக் கைகள்	வனசீவராசிகளின் சிகிச்சை தொடர்பாகCompressed CO2 powered Capture Guns Accessories கொள்வனவு செய்தல்	%	-	-	30	-	-	100
	தயாரிக்கப்பட்ட விலங்குக் கூடுகள்	எண்ணிக்கை	-	-	14	-	-	65

2.1.2 சுற்றாடல் முறைமைகளின் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ (ESCAMP) செயற்திட்டத்தின் முன்னேற்றம்

செயற்பாடுகள்	பிரதான செயற் சுட்டிகள்	அலகு	2021 நிறைவு	2022இலக்கு
தொகுதி 2a - வனசீவராசிகள் ஒதுக்கிட பிரதேசங்களை சுற்றியுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல்.	புந்தல தேசிய பூங்காவின் கோனவலான நீர் செயற்திட்டம், சிறுவர் பூங்கா, நெதிகன்வில சமுதாய அடிப்படையிலான அமைப்புக்கு புபே பாத்திர சோடி ஒன்று வழங்கப்பட்டது.	எண்ணிக்கை	03	-
	யால தேசிய பூங்காவின் ரணகெலியகம மற்றும் விஹாரமகாதேவிபுரவில் கோமாரிகா பயிரிடல்	எண்ணிக்கை	02	-
	உடவளவை தேசிய பூங்காவில் கந்தகிரிகொட கிராமத்தின் குடிநீர்	எண்ணிக்கை	07	02

	செயற்திட்டம், தேன் பெட்டிகள் மற்றும் கருவா கன்றுகள் பகிர்ந்தளித்தல், குமாரபுர நீர்குழாய் பாதை நிர்மாணித்தல் 02 வாவிகளை திருத்தியமைத்தல், மிளகுச் செடிகளைவழங்குதல். ரத்தபலாகம நீர் செயற்திட்டம், மிளகுச்செடிகள் வழங்கல்			
	கல்லோயா தேசிய பூங்காவின் ரத்துகல ஆதிவாசி மக்களின் விவசாய தேவைப்பாடுகள் தொடர்பாக நீர் செயற்திட்டங்களை செயற்படுத்தல், வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கை தொடர்பாக செடி மற்றும் விதைகள் வழங்கல், விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டமை	எண்ணிக்கை	03	01
தொகுதி**2b-** யானை – மனித நல்லுறவினூடே யானைகளினால் விளைவிக்கப்படும் பாதிப்புக்களை குறைத்தல்.	லுணுகம்வெஹர தே.பூ. மின்வேலி நிர்மாணிக்கும் பாதையிலுள்ள படர்த்தாவரங்களை அப்புறப்படுத்தல்	ஹெக்ரயார்	30.5	-
	காட்டுயானைக்களுக்குGPS கழுத்துப்பட்டிஅணிவித்தல்	எண்ணிக்கை	37	03
	வனசீவராசி பிராந்திய அலுவலகங்களுக்கு கணனிகளை கொள்வனவு செய்தல்	எண்ணிக்கை	55	-
	கணனி அச்சுப் பொறிகள்	எண்ணிக்கை	14	-
	தலைமையகத்திற்கு Plotter machineகொள்வனவு செய்தல்	எண்ணிக்கை	01	-
	லுணுகம்வெஹரதே.பூங்காவின் நீர் மூலங்களைப் ழுதுபார்த்தல்	எண்ணிக்கை	12	-
	லுணுகம்வெஹரதே.பூ. வாவிகைளை கழுதுபார்த்தல்	எண்ணிக்கை	05	-
	லுணுகம்வெஹரதே.பூ. சப்பாத்துப்பாலம்அமைத்தல் (கி.மீ. 40 உள்ளகபாதைமுறைமைக்குரியதாக)	எண்ணிக்கை	47	-
	பீட்டு அலுவலகங்கள், காட்டு யாளை கட்டுப்பாட்டு அலகுகளுக்கு உந்துருளிகள் கொள்வனவு செய்தல்.	எண்ணிக்கை	50	-
	குருணாகலை மாவட்டத்திலுள்ள கிராமங்களுக்காக மின்வேலி உபகரணங்கள் கொள்வனவு செய்தல்.	எண்ணிக்கை	17	-
தொகுதி**3a-** வனசீவராசிகள் ஒதுக்கிட பிரதேசங்களின் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம்	திருத்தப்பட்ட நீர் மூலங்கள் (உடவளவை)	எண்ணிக்கை	12	-
	திருத்தப்பட்ட வாவிகள் (உடவளவை)	எண்ணிக்கை	04	-
	யாலதேசியபூங்காவின் மாணிக்க கங்கையிலிருந்து பலட்டுபான வரை நீர்க்குழாய் பதித்தல்.	%	50	தொடர் வேலைகள் இடம்பெற்று வருகின்றன.
	வனசீவராசிகளுக்கான மருத்துவமனை நிர்மாணித்தல் (அம்பாறை)	%	50	தொடர் வேலைகள் இடம்பெற்று வருகின்றன.
	அப்புறப்படுத்தப்பட்ட	ஹெக்ரயார்	1080	தொடர் வேலைகள்

	படர்த்தாவரங்களின் தரை அளவு (உடவளவை, லுணுகம்வெஹர, புந்தல)			இடம்பெற்று வருகின்றன.
	யாலதேசியபூங்காவின் நீர் மூலங்களை திருத்துதல்	எண்ணிக்கை	12	-
	யாலதேசியபூங்காவின் 'கல் கெம்' திருத்துதல்	எண்ணிக்கை	03	-
	உடவளவை, லுணுகம்வெஹர, யால ஆகி தேசியபூங்காக்களில் புல் வெட்டும் இயந்திரங்கள் கொள்வனவு செய்தல்	எண்ணிக்கை	35	-
	லுணுகம்வெஹரதேசியபூங்காவின் வாவிகளின் திருத்துதல்	எண்ணிக்கை	03	-
	கல்லோயா தேசியபூங்காவின் பீட்டு அலுவலக திருத்த வேலை	எண்ணிக்கை	01	-
	விடுதிகளின் திருத்த வேலை (யாலதேசியபூங்கா)	எண்ணிக்கை	91	தொடர் வேலைகள் இடம்பெற்று வருகின்றன.
தொகுதி**3b –** வனசீவராசிகள் பாதுகாப்பு பிரதேசத்தை அண்டியதாக சுற்றுலா வதிகளை மேம்படுத்தல்	யாலதேசியபூங்காவின்படனங்கலசுற்றுலாஓய்வகம், வாகனத்தரிப்பிடத்தொகுதி, மலசலகூடவசதிகள், நிலஅலங்காரம்	%	30	70 வீதமான தொடர் வேலைகள் இடம்பெற்று வருகின்றன.
தொகுதி**3c—** வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் நிறுவக இயலளவு மற்றும் முதலீட்டுத் திறன் விருத்தி	யாலதேசியபூங்காவிற்கு Road Traffic Guns கொள்வனவு செய்தல்	எண்ணிக்கை	02	-
	வெளிக்கள அலுவலகங்களுக்கு தண்ணீர் பில்டர் (வடிகட்டி) தாங்கி கொள்வனவு செய்தல்	எண்ணிக்கை	80	-
	வெளிக்கள அலுவலகங்களுக்கு நீர் தாங்கி கொள்வனவு செய்தல்	எண்ணிக்கை	30	-
	வனசீவராசிகள் அலுவலர்களுக்கு முதலாவது மற்றும் இரண்டாவது டிப்ளோமா பாடநெறி	அலுவலர்கள்	57	-
	700 காட்டு யானைகளின்Dung மாதிரிகள் மூலம் உயிரணுக்களின் பல்வகைமையை கண்டறிதல்	எண்ணிக்கை	700	-
	கிரித்தலை வனசீவராசிகள் ஆய்வு மற்றும் பயிற்சி நிலைய, விரிவுரை மண்டப திருத்த வேலைகள்	%	40	தொடர் வேலைகள் இடம்பெற்று வருகின்றன.
	கிரித்தலை வனசீவராசிகள் ஆய்வு மற்றும் பயிற்சி நிலையத்தின் பழைய வதிவிட கட்டிடத்தின் திருத்த வேலை	%	20	தொடர் வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

2.1.3 பிற நிறுவனங்களின் கீழ் முன்டுக்கப்படும் செயற்திட்டங்கள்

மொரகஹகந்த – கள் கங்கை செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வனசீவராசிகள் பாதுகாப்புப் பணிகள்

களு கங்கை மற்றும் உத்தேச மொரகஹகந்த நீர்த்தேக்கத்தை அண்டியதாக நீரேந்துப் பிரசேதமொன்றை பிரகடனப்படுத்தல் மற்றும் அங்கு மனித செயற்பாடுகளை மட்டுப்படுத்துவது அதன் நோக்கமாவதுடன் அதன் கீழ் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் இடம்பெறுகின்றன.

- மேலே குறிப்பிடப்பட்ட பிரதேசத்தை அண்டியதாக மனித – வனசீவராசி மோதல்களைத் மட்டுப்படுத்துமுகமாக தடைகளை அமைத்தல்
- மனித – வனசீவராசி மோதல்களைத் மட்டுப்படுத்துமுகமாக செயற்திட்டத்திற்கு உட்படும் பகுதியில் வனசீவராசிகளின் வாழ்விடங்களை வளமாக்கல்.
- செயற்திட்ட பிரதேசத்தை அண்டிய வனசீவராசிகள் ஒதுக்கிட பகுதிகளில் சுற்றாடல் சுற்றுலா தொழிலை மேம்படுத்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்.

பணிகள்	பிரதான செயலாற்ற சுட்டி	அலகு	2021நிறைவு
வனசீவராசிகள் ஒதுக்கிட பகுதிகளில் சுற்றாடல் சுற்றுலா தொழிலை மேம்படுத்தல்	**வஸ்கமுவ / சேமாவதி தேசிய பூங்கா** பூங்கா நுழைவாயில்	எண்ணிக்கை	01
	விடுதி திருத்த வேலை	எண்ணிக்கை	03
வனசீவராசிகள் ஒதுக்கிட பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்.	**மின்னேரிய தேசிய பூங்கா** பாதை மேம்படுத்தல் 13 கி.மீ.	%	50
	விவரண நிலைய திருத்த வேலை	%	80
	வஸ்கமுவ தேசிய பூங்கா குடிநீர் வழங்கல் (அலுவலகத்திற்கு)	எண்ணிக்கை	01

2.2 2021ஆண்டில் திணைக்களத்தின் மூலம் முன்னெடுக்கப்பட்ட சிறப்புச் சேவைகள்

- 2021 பெப்ரவரி மாதம் 02 ஆந் திகதிய உலக ஈரலிப்பு நில தினம், " ஈரலிப்பு நிலம் மற்றும் நீர் எனும் தொனிப்பொருள்படகொண்டாடப்பட்டது.

- வனசீவராசிகள் ஒதுக்கிட வலையமைப்பினுள் வன குற்றங்களை தடுப்பது தொடர்பாக 813 சுற்றிவளைக்கப்பட்டு, வனவிலங்கு மற்றும் தாவர கட்டளைச் சட்டத்தின் கீழ் சட்டத்தை அமுல்படுத்தி ரூ. 56 மில்லியன் தண்டப் பணம் அறவிடப்பட்டுள்ளது.

- 2021ஆண்டில் வனசீவராசிகள் பாதுகாப்புத் நிதியத்தில் வரவுவைக்கப்பட்ட நீதிமன்ற தண்டப்பண தொகையிலிருந்து நட்டஈட்டின் தன்மைக்கேற்ப அச் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் ஒத்துழைப்பு நல்கிய அலுவலர்களுக்கு ரூபா 13.96 மில்லியன் ஊக்குவிப்புப்ப படியாக செலுத்தப்பட்டுள்ளது.

- 2021ஆண்டில் காட்டு யானை – மனிதன் மோதலைக் குறைப்பதற்காக பின்வரும் யானை வெடிகள் கொள்வனவு செய்யப்பட்டு காட்டு யானைகளின் அச்சுறுத்தல் நிலவும் பிரதேசங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

யானைவெடி வகை	அளவு	செலவு (ரூ.மி.)
இடிச்சத்த கிளரொலி (பெரியது)	235,000	28.66
இடிச்சத்த கிளரொலி (சிறியது)	770,000	78.42
சமிக்ஞை சுருள்	291,250	42.87
மொத்தம்	**1,296,250**	**149.95**

- காட்டு யானை – மனிதன் மோதலைக் குறைப்பதற்கான செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை தயாரிப்பது தொடர்பான அறிவார்ந்த விரிவுரை 2021.03.24 ஆந் திகதி SLIDA நிறுவனத்தில் நடாத்தப்பட்டது.

- காட்டு யானை – மனிதன் மோதலைக் குறைப்பதற்கான ஆய்வுசார் ஒத்திகைகளின் கீழ் காட்டு யானைகள் கிராமங்களுக்குள் புகுவதை தடுக்குமுகமாக சந்தனத்திரி எரித்தல் மற்றும் உயிரியல் வேலியொன்றுக்கு 3000 புற்செடிளை நடப்பட்ள்ளன..

- 2021ஆண்டில் காட்டு யானை – மனிதன் மரணங்களின் வகைப்படுத்தல், சொத்து இழப்பு மற்றும் உடற்பாதிப்புக்களின் அதிகரிப்பு, மின்வேலி தொடர்பான தகவல்கள் இணைப்பு 02 மூலம் காட்டப்பட்டுள்ளது.

- நாடு பூராவும் காட்டு யானைகளின் தாக்குதல்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாவட்டச் செயலகங்கள் வாயிலாக இழப்பீடு வழங்கப்படுவதுடன், 2021 ஆண்டின் டிசம்பர் 31 திகதி வரை செலுத்தப்பட்ட இழப்பீடு பின்வருமாறு. .

இழப்பீட்டின் வகை	2021.12.31 திகதியளவில் அறிக்கையிடப்படுள்ள நிகழ்வுகளின்எண்ணிக்கை	2021.12.31 திகதியளவில் அறிக்கையிடப்படுள்ள கொடுப்பனவுகள் (ரூ.மி.)
உயிரிழப்புக்கள்	142	33.20
உடற் காயங்கள்	58	1.22
சொத்து இழப்புக்கள்	1326	40.36
மொத்தம்	**1526**	**74.78**

(மேற்படி இழப்பீட்டுத் தொகையில் 2021 ஆண்டில் நிகழ்ந்த பாதிப்புகளுக்கு மேலதிகமாக 2021ஆண்டிற்க் முன்னர் நிகழ்ந்த போதிலும் 2021ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகளுக்கான கொடுப்பனவுகளும் உள்ளடங்குகின்றன.)

- Wildlanka வைல்ட் லங்கா' சர்வதேச ஆராய்ச்சி சஞ்சிகை தற்பொழுது வருடமொன்றுக்கு 04தொகுதிகள் என்ற அடிப்படையில் வெளியிடப்படுவதுடன் 2021 ஆம் ஆண்டில் தரச்சிறப்புமிக்க உள்நாட்டு வெளிநாட்டு ஆராய்ச்சி அறிக்கைகள் பிரசுரிக்கப்பட்டன. அது 200 பக்கங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் ஆசிரியர் குழாமானது, அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும், தேர்ச்சி பெற்ற விஞ்ஞானிகளையும் உள்ளடக்குகியுள்ளன. இது திணைக்களத்தை சர்வதேச ரீதியான அங்கீகாரத்தை பெறுவதற்கு வழிகோழியது எனலா

- திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட இலங்கையில் காட்டு யானைகளின் DNA பகுப்பாய்வு பற்றிய ஆய்வறிக்கை சர்வதேச ரீதியாக பெரு வரவேற்பிற்குரிய ஆய்வுச் சஞ்சிகையொன்றில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

- இந்நாட்டைச் சேர்ந்த ஒருவரினால் முதன் முறையாக கண்டுபிடிக்கப்பட்ட "StrobilanthesMadahinnensisNilanthi"இது திணைக்கள அலுவலர் ஒருத்தரினாலேயே கண்டுபிடிக்கப்பட்டதுடன்சர்வதேச ரீதியாக பெரு வரவேற்பிற்குரிய ஆய்வுச் சஞ்சிகையொன்றில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

- திணைக்களத்தினால் *CrudiaZeylanika*எனும் தாவரம் குறித்து நீண்ட ஆய்வினை மேற்கொண்டு தயாரிக்கப்பட்ட சர்வதேச ரீதியாக பெரு வரவேற்பிற்குரிய ஆய்வுச் சஞ்சிகையொன்றில் பிரசுரிப்பதறகாக ஒப்படைக்கப்பட்டுள்ளது..

- கரும் புலியின் DNA பகுப்பாய்வு சிறப்பாக நிறைவடைந்ததுடன் அது தொடர்பான ஆய்வறிக்கை தயாரிக்கப்படுகின்றது.

- வனசீவராசிகள் பாதுகாப்புத் தொடர்பான ஆற்றல், காலத்திற்கேற்ற நிகழ்வுகள், விவரண நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியன தொடர்பான விஞ்ஞானபூர்வ விடயங்களை உலகுக்கு வழங்குவதை நோக்காக கொண்டு வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் Blue Green Media" YouTube எனும் அலைவரிசை ஆரம்பிக்கப்பட்டது. அதன் கண்ணி நிகழ்ச்சித்திட்டம் 2021 உலக வனசீவராசிகள் தினத்தை அடிப்படாக கொண்டு நடாத்தப்படும் அறிவார்ந்த கலந்துரையாடலில் ஆரம்பிக்கப்பட்டதுடன் 08 நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமாக முடிவுறுத்த இயலுமாயிற்று. அந் நிகழ்ச்சித்திட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்ட வளவாளர்களின் அர்ப்பணிப்பு நிகழ்ச்சித்திட்டம் வெற்றிகரமாக அமைவதற்கு உந்துசக்தியாக அமைந்தது எனலாம். இந் நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புபடுகின் வனசீவராசி நேயர்களின் எண்ணிக்கை அதிகரித்ததனால் அவ் அலைவரிசை மேலும் 04 அலைவரிசைகளை இணைத்துக் கொள்வதனூடாக விரிவடைந்தது.

  - ✓ **நீல பசுமை மரபுரிமை (நீல ஹரித்த உருமய)**

    வனசீவராசிகள் மற்றும் தாவரங்களைப் பாதுகாக்கும் கட்டளைச் சட்டத்தினால் பேணிப் பாதுகாக்கப்படும் தாவரங்கள் மற்றும் விலங்குகளை நாளைய தினத்திற்காக பாதுகாப்பதை நோக்காக கொண்டு, அவை பற்றிய சுருக்கமான அறிமுகம், வாழ்விடம், பாதுகாப்பு நிலை, சட்டரீதான நிலை, அச்சுறுத்தல் மற்றும் பாதுகாப்பு என்பன பற்றிய சுருக்கமான வீடியோ நாடாக்கல் என்பனவற்றை உள்ளடக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

  - ✓ **ஹரித அருத**

    வனசீவராசிகள் பாதுகாப்பு தொடர்பாக பல்வேறு விவரக்குறிப்புக்களினூடே அறிவார்ந்த கலந்துரையாடலையும் உள்ளடக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. திணைக்களத்துக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல் மற்றும் அவற்றை நிவர்த்தி செய்துகொள்ளும் விதமாக இக் கலந்துராடலை வடிவமைப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

  - ✓ **காலத்திற்கேற்றவாறான தொடர்பாடல்**

    திணைக்களத்தின் காலத்திற்கேற்றவாறான நிகழ்வுகள் மற்றும் சர்வதேச ரீதியாக வெளிடப்பட்டுள்ள தினங்களையொட்டியதாக ஒழுங்கமைக்கப்படும் அறிவார்ந்த

கலந்துரையாடலையும் உள்ளடக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- ✓ **விவரண நிகழ்ச்சித்திட்டங்கள்**

  திணைக்களத்தின் ஒதுக்கிட பிரதேச வலையமைப்பையொட்டிதான சுற்றாடல் பெறுமானங்கள் மற்றும் இயற்கை எழில் என்பன தொடர்பாக ஆய்வாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், வனசீவராசி நேயர்கள் ஆகியோரை நோக்காக கொண்டு வடிவமைக்கப்பட்ட விவரண நிகழ்ச்சித்திட்டங்ளை உள்ளடக்கப்படவுள்ளன.

- **இலங்கையில் ஈ சைட்ஸ் (e-CITES)இலத்திரனியல் சான்றுப்படுத்தும் முறையைச் செயற்படுத்தல்** .

  ✓ இலங்கையில் ஈ சைட்ஸ் **(e-CITES)**இலத்திரனியல் சான்றுப்படுத்தும் முறையைச் செயற்படுத்தியதன் ஊடாக வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினால் CITES மற்றும் FFPOஅனுமதிப்பத்திரங்களுக்காக விண்ணப்பித்தல், விநியோகித்தல் மற்றும் கட்டுப்படுத்தல் செயற்பாடானது முற்று முழுதாக தன்னியக்கமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அரசுகளிடையே மேற்கொள்ளப்படும் அச்சுறுத்தலுக்குட்பட்ட தாவர, விசேட விலங்குகள் சம்பந்தமான வர்த்தகத்தை செயற்திறன்படுத்தல் மற்றும் விசேட விலங்குகளின் சட்டவிரோத வர்த்தகத்தை கட்டுப்படுத்தல் என்பன இச் செயற்திட்டத்தின் பிரதான நோக்கங்களாகும். இவ் **e-CITES**இலத்திரனியல் சான்றுப்படுத்தும் முறை மூலம் எதிர்காலத்தில், தற்போது இலங்கை சுங்கத்தினால் பயன்படுத்தப்படும் ASYCUDAமுறைமையுடனான செயற்பாட்டுடன், செயற்படுத்துவதற்கு வசதியளிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

2.3 திணைக்களத்தின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கான இலக்குகள் மற்றும் சவால்கள்

	எதிர்கால இலக்குகள்		சவால்கள்
1	**வனவிலங்கு – மனித மோதலைக் கட்டுப்படுத்தல்**	1. தற்போதுள்ள 4,633 கி.மீ மின் வேலிகளை பராமரித்துப் பேணல். 2. புதிதாக 1,500 கி.மீ. மின்வேலிகளை நிர்மாணித்தல். 3. யானை மனித மோதலைக் கட்டுப்படுத்துமுகமாக ஆய்வுகளை ஒத்திகை பார்த்தல்.	✓ பாரியபௌதீக மற்றும் மனித வளங்ளை அவசியமாதல். ✓ மின்வேலி நிர்மாணிக்கும் போது காணிப் பிரச்சினைகள் ஏற்படல் மற்றும் மக்களின் எதிர்ப்புக்கள் கிளம்புதல் ✓ காணி சம்பந்தமான பிரச்சினைகளைத் தீர்க்கும் போது அதனுடன் தொடர்புடைய (வன பாதுகாப்புத் திணைக்களம்/ மாவட்டச் செயலகம் போன்ற) நிறுவனங்களிடையே நிலவுகின் பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடல். ✓ மின்வேலிக் கம்பங்களை கொள்வனவு செய்வதற்குள்ள ஒரே நிறுவனம் அரச மரக் கூட்டுத்தாபனம் ஆகையால் அதன் இயலளவிற்கேற்ப ஏற்படுகின்ற தாமதம். ✓ மின்வேலி உபகரணங்களை இறக்குமதி செய்யும் போது குறித்த நிறுவனங்களினால் ஏற்படும் தாமதம்.

			✓ பூங்காக்களிலுள்ள பாதை முறைமைகளின் குறைபாடுகள் காரணமாக ஏற்படுகின்ற போக்குவரத்து இடையூறுகள்.
2	**ஒதுக்கிட பிரதேசங்களின் வாழ்விட வளமாக்கல்**	1. ஒதுக்கிட பிரதேசங்களிக் 2,200 ஹெக். வாழ்விடங்கள் வளமாக்கப்பட்டன. 2. 31 நீர் மூலங்கள் திருத்தப்பட்டன.	✓ காலநிலை மாற்றங்களை எதிர்கொள்வதனூடாக எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை அடைதல். ✓ ஒதுக்கிட பிரதேசங்களில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் போது நிலவுகின்ற தூரம் மற்றும் தங்குமிட வசதிகளின்மை காரணமாக பூர்த்தி செய்யப்படும் வேலை வரையறுக்கப்படல்.
3	**வனசீவராசிகள் சுகாதார அலகுகளின் வசதிகளை மேம்படுத்தல்.**	1.பாதிக்கப்படும் வனவிலங்குகளுக்கு சிகிச்சையளிப்பதற்கு வனசீவாசிகள் அலகுகளில் வசதிகளை மேம்படுத்தல்.	✓ பெறுகை செயற்பாட்டின் போது எதிர்பார்க்கப்பட்ட தரம் மற்றும் உயர் தர நிலைமையின் நியமங்களுக்கு ஏற்றவாறு உபகரணங்கள் மற்றும் இரசாயனப் பொருட்களை கொள்வனவு செய்வதிலுள்ள சிரமம் ✓ வெளிக்கள அலுவலகங்களில் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ளும் போது சுற்றுலாத் துறைக்கு முன்னுரிமை வழங்கவேண்டி நேரிடல் ✓ இடமாற்ற கொள்கைக்கு அமைய பயிற்சிபெற்ற அலுவலர்கள் வேறு இடங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லல், புதிய அலுவலர்களை பயிற்சியில் ஈடுபடுத்துவதற்கு காலஞ்செல்லல் மற்றும் பயிற்சி பெற்ற அலுவலர்களின் பற்றாக்குறை
4	**வனசீவராசிகள் ஒதுக்கிடங்களை பேணிக்காத்தல் மற்றும் புதிய ஒதுக்கிட பிரதேசங்களை பிரகடனப்படுத்தல்.**	**1.** அடையாளங் கணாப்பட்ட 20 புதிய ஒதுக்கிட பிரதேசங்களை பிரகடனப்படுத்தல். **2.** 150. கி.மீ. ஒதுக்கிடப் பிரதேசங்கள் அளவிடப்பட்டு எல்லை கல் பதித்தல். **3.** 1800 எல்லைக் கல் பதித்தல்	✓ அரச மற்றும் தனியார் அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பாக ஒதுக்கிடங்களின் காணிகளை கையாள்வதற்காக செய்யப்படுகின்ற கோரிக்கைகள். ✓ ஒதுக்கிட பிரதேசங்களுக்காக அடையாளங் காணப்பட்ட காணிகள் தொடர்பாக பிற நிறுவனங்களின் ஒருமைப்பாட்டினை சீராக்கல் மற்றும் தாமதங்கள் ஏற்படல். ✓ நில அளவைத் திணைக்களத்துடன் பணியாற்றும் போது அவர்களது திட்டங்கள் மற்றும் காலச் சட்டகத்திற்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளமை. ✓ காலநிலை மாற்றங்களை எதிர்கொள்வதனூடாக எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை அடைதல்.
5	**வனசீவராசிகள் மோசடிகளைத் தடுப்பது தொடர்பான பொறிமுறை மைய வலுப்படுத்தி பேணிச் செல்லல்.**	**1.** வனசீவராசிகள் மோசடிகளைத் தடுப்பது தொடர்பாக SMART காவல் நடமாட்ட முறையை நாடு பூராவும் விஸ்தரித்தல். **2.** GPS மற்றும்GIS ஆகிய புதிய தொழிநுட்ப முறையியல்ளின்	✓ துறை சார்ந்த அனுபவமிக்க பயிற்சி அலுவலர்கள் போதியதாக இன்மை. ✓ அலுவலர்களை குழுக்களாக வலய மட்டத்தில் ஒரேயடியாக ஈடுபடுத்துவதிலுள்ள சிரமம் காரணமாக பயிற்சி முடிவடையும் வரை அலுவலர்களின் அறிவை பிரயோக ரீதியாக

		பயன்பாட்டினை மேம்படுத்தல். **3.** வனவிலங்குகள், தாவரங்கள் கட்டளைச் சட்டம் மற்றும் நீதிமன்ற நடைமுறைக் கோவை சம்பந்தமாக அலுவலர்களை விழிப்பூட்டல்.. **4.** வனசீவராசிகள் மோசடிகளை தடுப்பதற்கு தற்போதைக்கு ஏற்றவாறு வனவிலங்கு மற்றும் தாவர கட்டளைச் சட்டத்தை திருத்தியமைத்தல் மற்றும் புதிய சட்டங்களை உள்ளடக்குதல். **5.** வனசீவராசிகள் மோசடிகளை தடுப்பது தொடர்பாக தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு புலனாய்வு அலகொன்றைத் தாபித்தல்.	பெற்றுக் கொள்வதிலுள்ள அசௌகரியம். ✓ நீதிமன்ற நடைமுறைக் கோவை சம்பந்தமாக பிரயோக ரீதியானதும் கோட்பாட்டு ரீதியானதுமான அறிவை வழங்குதவற்கு பொருத்தமான செயன்முறையொன்று இல்லாமை. ✓ கட்டளைச் சட்டங்களின் திருத்தத்தின் போது நிறுவனங்களிடையேயான ஒருங்கிணைப்பிற்கு அமைய நடவடிக்கைகள் தாமதமடைதல். ✓ புலனாய்வு அலகினை தாபிக்கும் போது பொருத்தமான அலுவலர்களை தெரிவு செய்தல் மற்றும் அரச புலனாய்வு அலகினூடாக அக்குழுவினை பயிற்றுவித்தல்.
6	**ஒதுக்கிட பிரதேசங்களை அண்டி வாழும் மக்களது ஒத்துழைப்புக்களை பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பெற்றுக் கொள்ளல்**	**1.** கிராமிய மக்களது வனசீவராசிகளின் பாதுகாப்பு குறித்த எண்ணக்கருக்களை விருத்தி செய்வதற்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல். **2.** கிராமிய மக்களை வலுவூட்டும் பொருட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.	-
